

திண்டுக்கல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் த நெடுஞ்செழியன் மகன் திருமணத்தை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கழக துணை பொதுச்செயலாளர் இ.பெரியசாமி நடத்தி வைத்தார். உடன் திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர், துணை மேயர் ராசப்பா, மேயர் இளமதி ஜெயப்பிரகாஷ் மற்றும் மணவீட்டார் உள்ளனர்.

### தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்க வருகை தரும் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மதுரை வடக்கு – தெற்கு மாவட்டத்தினருக்கு அமைச்சர் பி.மூர்த்தி – மு.மணிமாறன் வேண்டுகோள்!

மதுரை, அக். 28 -

தேவர் ஜெயந்தி உள்ளிட்ட முக்கிய விழாக்களில் பங்கேற்பதற்காக விமான மூலம் மதுரை வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (28.10.2025 . செவ்வாய் கிழமை) மாலை 6 மணி அளவில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர். அதன் விபரம் வருமாறு:





கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குருபூஜை விழா மற்றும் பல்வேறு விழாக்களில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு இன்று (28.10.2025 . செவ்வாய் கிழமை) மாலை 6 மணிக்கு மதுரை விமான நிலையம் வருகிறார்.

அங்கு அவருக்கு மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,

கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பங்கேற்று கையில் இரு வண்ணக் கொடி ஏந்தி விண்ணை முட்டும் அளவிற்கு முதல்வரை வரவேற்று கோஷங்கள் எழுப்பி சிறப்பான வரவேற்பு அளித்திட வேண்டும் என வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மதுரை, அக். 28 -

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குருபூஜை மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரைக்கு வருகை தரும், கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இன்று (28.10.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 06.00 மணி அளவில் மதுரை விமான நிலையத்தில் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் மாமன்னர் மருது பாண்டியர்கள் 224வதுஆண்டு குருபூஜையினை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் பொன்.முத்துரமலிங்கம் தலைமையில் கழக நிர்வாகிகள் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் சுதந்திர போராட்ட வீரர்கள் மாமன்னர்கள் மருது பாண்டியர் சகோதரர்களின் 224வது குருபூஜை முன்னிட்டு தெப்பக்குளத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ தலைமையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநில உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ம.ஜெயராம் தீர்மான குழு அக்ரி கணேசன், மாவட்ட நிர்வாகிகள் ஒச்சுபாலு, மூவேந்திரன், சின்னம்மாள் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

### எளிய பின்புலங்களில் இருந்து சாதிக்கும் ஒவ்வொரு வீரரின் வெற்றியிலும்

# சமூக நீதி மண்ணான தமிழ்நாடு பெருமை கொள்கிறது!

### பஹ்ரைனில் நடைபெற்ற – ஆசிய இளையோர் கபடி பிரிவில் தங்கம் வென்ற கார்த்திகா – அபினேஷ் மோகன்தாசைப் பாராட்டி –

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, அக். 28 -**

**பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் கபடி பிரிவில் தங்கம் வென்ற கார்த்திகா மற்றும் அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோரை பாராட்டி, இருவருக்கும் தலா 25 லட்ச ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பாராட்டி பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் அப்பதிவு வருமாறு:-

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 2025: தமிழ்நாட்டுத் தங்கங்களுக்கு ஊக்கத் தொகை யுடன் உற்சாக வரவேற்பு!

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற நம் கபடி வீரர்கள் கண்ணகி நகர் கார்த்திகா மற்றும் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோர் சென்னை திரும்பியதும், நேராக எனது இல்லத்துக்கு அழைத்துப் பாராட்டி, இருவருக்கும் தலா 25 லட்ச ரூபாய் உயரிய ஊக்கத் தொகை வழங்கினேன்.

கண்ணகி நகருக்கு நான் சென்ற போதெல்லாம் அங்கு வசிக்கும் மக்கள் என்னிடம் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தர உத்தரவிட்டிருந்ததை நினைவு கூர்ந்து, “உங்க ஏரியாவில் இப்ப பிரச்சினைகள் தீர்ந்திருக்கா?” என்று கார்த்திகா விடம் கேட்டேன். கடந்த 4 ஆண்டு களில் பெருமளவில் கண்ணகி நகர் முன்னேறியிருப்பதாகப் புன்னகையோடு சொன்னார்.

கார்த்திகாவும் அபினேசும் மேலும் சில உதவிகளையும் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அவற்றையும் நிறைவேற்றித் தருவோம்.

நேற்று நான் ‘பைசன்’ காளமாடன்-இல் கண்ட மணத்தி கணேசன் தொடங்கி, இன்று அபினேஷ், கார்த்திகா வரை எளிய பின்புலங்களில் இருந்து சாதிக்கும் ஒவ்வொரு வீரரின் வெற்றியிலும் சமூகநீதி மண்ணான தமிழ்நாடு பெருமை கொள்கிறது.

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில் – ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில்

# ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் 3 திட்டப் பணிகள்!

### அமைச்சர் மா.மதிவேந்தன் நேரில் ஆய்வு செய்தார்!

தருமபுரி, அக்.27-

தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 3 திட்டப் பணிகள் ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், முன்னிலையில் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்தார்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ரூ.47.88 இலட்சம் மதிப்பீட்டில் 200 கல்லூரி மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் புதிய விடுதி கற்றல் கற்பித்தல் கூடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இவ்விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரப்பகுதியில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் 250 கல்லூரி மாணவியர்கள் தங்கி பயிலும் வகையில் சமூகநீதி கல்லூரி மாணவியர் புதிய விடுதி கட்டடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்து, இப்பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு வழங்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்விடுதிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் 10 அறைகளும், முதல் தளத்தில் 16 அறைகளும் மற்றும் இரண்டாம் தளத்தில் 16 அறைகளும் என மொத்தம் 42 அறைகளுடன் மாணவியர்கள் தங்கும் அறை கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் ஒரு அறைக்கு 6 மாணவியர்கள் தங்கும் வகையில் தனித்தனி கழிவறை மற்றும் குளியலறை வசதிகளும், அனைத்து அறைகளிலும் ஒவ்வொரு மாணவியருக்கும் தனித்தனி கட்டில் மற்றும் படிப்பதற்காக நாற்காலிகளுடன்கூடிய தனித்தனி மேஜைகள், உணவருந்தும் அறையில் 100 பேர் வரை அமர்ந்து உணவருந்தும் வகையில் மேஜைகளும், சமையலறை, பொருட்கள் வைப்பு அறை மற்றும் RO குடிநீர் வசதி, விடுதி காப்பாளர் அறை உள்ளிட்ட அறைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வெள்ளாளப்பட்டி கிராமத்தில் அயோத்தி தாசபண்டிதர் குடியிருப்பு பகுதி மேம்பாடு திட்டம் மற்றும் நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் ரூ.127.49 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு மைய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்தார். இக்கிராம அறிவு மைய கட்டிடத்தின் தரைத் தளத்தில் 100 பேர் அமரும் வகையில் திறன் மேம்பாட்டுக்கூடம், திட்ட பொருட்காட்சி அறை, ஆண்கள் மற்றம் பெண்களுக்கான கழிவறை மற்றும் முதல் தளத்தில் 100 பேர் அமரும் வகையில் விவசாயிகள், சுயஉதவிக்குழுக்கள் பயன் பெறும் வகையில் பயிற்சி மையம், ஆலோசனை அறை மற்றும் கணினி அறை உள்ளிட்ட அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கவிதா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.தேன்மொழி, மாவட்ட மேலாளர் தாட்கோ வி.ராமதாஸ், சேலம் தாட்கோ செயற்பொறியாளர் கண்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### சென்னை மாநகராட்சி சார்பில் 92 இடங்களிலிருந்து

# 37.91 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு எரியூட்டி அகற்றப்பட்டன!

சென்னை, அக்.28–

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 25.10.2025 அன்று ஒரு நாள் மட்டும் 92 இடங்களிலிருந்து 37.91 மெட்ரிக் டன் பழைய சோஃபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.


பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாள்தோறும் சராசரியாக 6,500 மெட்ரிக் டன் திடக்கழிவுகளும், 1,000 மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் கட்டுமான இடுபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொது மக்கள் குப்பைகள் மட்டுமல்லாது, தங்களது வீட்டில் உள்ள பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், மக்களுக்கு இதன் காரணமாக ஏற்படும் இடையூறு மற்றும் சுகாதாரச் சீர்கேடு கள் ஏற்படுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட் டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோஃபாக்கள்,மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை அகற்றிடும் புதிய நடவடிக்கை 11.10.2025 அன்று தொடங்கப்பட்டது.

அதன்படி, கடந்த இரண்டு சனிக்கிழமைகளில் (11.10.2025 மற்றும் 18.10.2025) 355 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 103.48 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு அகற்றப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (25.10.2025) 92 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 37.91 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத் திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டப்பட்டது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## 28ஆம் ஆண்டு நினைவு நாள்



28.10.2025

கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**நீங்கள் மறைந்த இந்நாளில் எங்களின்**
**கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்**
**என்றும் உங்களின் நினைவில் வாழும் நெஞ்சங்கள்**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தக்குமார், பூச்சி எஸ். முருகன்**

மகள்கள் : **ஸ்ரீமதி பேபி (எ)** அன்புத்தங்கை **ஸ்ரீமதி வடிவு, ஸ்ரீமதி சாந்தி, ஸ்ரீமதி ராஜாமணி**

மற்றும் பேரன், பேத்திகள், மருமகன்கள், மருமகள்கள்

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர்: வி. மணிகண்டன்
1/46சி, விளாமரத்துப்பட்டி அஞ்சல்,
உடுமலைப்பேட்டை - 642207,
திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : 1)ஆர். மோகன்ராஜ், 342, ஆண்டாள் தெரு, ஆறுமுக கவுண்டர் லே அவுட், சிவசக்தி குடியிருப்பு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) கே. அய்யப்பன், 2/180ஏ, மேட்டு தெரு, கொழுமம் அஞ்சல், மடத்துக்குளம் - 642204, திருப்பூர் மாவட்டம். 3)ஆ. ருத்ரப்பன் 61, மெயின் ரோடு, சாமராயப்பட்டி அஞ்சல், குமரலிங்கம் - 642204, திருப்பூர் மாவட்டம். 4) நா. கனகராஜ், 372, ராமர் கோவில் தெரு, பள்ளபாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642112, திருப்பூர்மாவட்டம். 5)எஸ். ரபியுல்லா79சி, காளிங்கராயர் நகர், ஜமீன் ஊத்துக்குளி - 642004, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம். 6) ம. மனோஜ்குமார் 1/152, சோமவாரபட்டி, பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப் பேட்டை, திருப்பூர் மாவட்டம். 7) சு. செந்தில்குமார் , 789, சின்னப்பன்புதூர், மைவாடி, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642203.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 27-10-2025

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு
மேம்பாட்டு அணி